## கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.

P.W.–2

O.S.No.396/2015

2025 ம் ஆண்டு மார்ச் மாதம் 04 ம் நாள் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி திரு.கே.ஆர். கண்ணன், பி.ஏ., பி.எல்., கூடுதல் சார்பு நீதிபதி, திருப்பூர் அவர்களால் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : திரு. லட்சுமி | வயது:69 |
| க/பெ. : திரு. கந்தசாமி | முகவரி: |
| தொழில் : | |

**முதல் விசாரணை :**

வாதிகள் ஆஜர். 4,5 பிரதிவாதிகள் ஆஜர் இல்லை. வாதிகள், 4,5 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். தாவாவில் நான் 3 ம் தரப்பினர்.முதல் விசாரணைக்கான எனது சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் உண்மையானவை. பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்து அதில் உள்ள விபரங்களை தெரிந்து கொண்டு வழக்குரைஞர் முன்னிலையில் கையொப்பம் செய்தேன். அதை ஏற்றுக் கொண்டு நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை என் தரப்பில் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

| | | |
|---|---|---|
| சாட்சியின் ஆதார் அட்டை அசலுடன் ஒப்பிட்டு சரி பார்க்கப்பட்டது | ஒளி நகல் | **சா.சா.ஆ X1** |
| 1.3.2025 திருப்பூர் தெற்கு பெருந்தொழுவு கிராமம் சர்வே எண். 385/3 பி1, பட்டா எண். 785 க்குரிய சிட்டா | கணினி நகல் | **சா.சா.ஆ X2** |
| 3.3.2025 திருப்பூர் தெற்கு பெருந்தொழுவு கிராமம் சர்வே எண். 385 புலப்படம் | கணினி நகல் | **சா.சா.ஆ X3** |

ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆகவே எனது தரப்பு சான்று ஆவணங்களை ஏற்று வழக்குப்படி உத்தரவு ஆக வேண்டுகிறேன்.

சா.சா.ஆ–X3 ல் ஆன்லைனில் இருந்து எடுக்கப்பட்டவை அப்படியே தாக்கல் செய்யவேண்டும். அதில் மேற்குறிப்புகள் செய்ய சாட்சிக்கு அதிகாரம் இல்லை. இந்த ஆட்சேபனை தீர்ப்புரையின் போது கவனத்தில் கொள்ளப்படும்.

**குறுக்கு விசாரணை**

4,5 பிரதிவாதிகள் வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2025.03.04 17:36:18 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.